RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22468

OPEN ACCESS

# ஆற்றுப்படை இலக்கியங்களில் விளிம்பு நிலைக்கூறுகள்

மோ. விஜயசோபா [அ, *], ஐ. லாலி ஏதேஸ் [அ]

[அ] தமிழாய்வுமையம், முஸ்லீம் கலைக் கல்லூரி, (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைவுப்பெற்றது), திருவிதாங்கோடு,கன்னியாகுமரி-629174, தமிழ்நாடு, இந்தியா

# Marginal Elements in Aattupadai Literatures

**M. Vijaya sobha [a, *], J. Lali Ethaz [a]**

[a] Research Centre of Tamil, Muslim Arts College, (Affiliated to Manonmaniam Sundaranar University) Thiruvithancode, Kanniyakumari-629174, Tamil Nadu, India

* Corresponding Author: vijayasohama@gmail.com

Received: 18-07-2022
Revised: 23-09-2022
Accepted: 02-10-2022
Published: 09-10-2022

Check for updates

**ABSTRACT**

There were various artists during the Sangam Literature period, among them, the performers the paanars, occupy a particular place. The paanars are of various kinds based on the musical instrument they play and according to the context in which they sing. The Books that appeared in each period reflect the life of that period. Till date, there are countless books in the history of human society that highlight the lives of marginalized people. The Aattupadai texts talk about the dominant class and the penniless. It cannot be denied that the lives of artists like Panar, Koudhar, Porunar, Viraliyar who lived during the Sangam period were also in a weak state. We can see that all these are recorded in the books which are directed towards anthropological thought. There is no denying that artists, especially those who lived a poor life, had art and tools. It was the treasury of our forefathers. This article talks about these artists, their art and their tools.

**Keywords:** Aatruppadi, Paanar, Panar, Koudhar, Porunar, Poverty

## முன்னுரை

ஒவ்வொரு காலக் கட்டத்திலும் தோன்றிய நூல்கள் அந்தந்த காலக்கட்ட வாழ்க்கையை பிரதிபலிக்கும் வகையில் இருக்கிறது. இன்று வரை மனித சமுதாய வரலாற்றில் விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கையை எடுத்துக்காட்டுவதாக ஆற்றுப்படை நூல்கள் இருக்கின்றன. ஆற்றுப்படை நூல்கள் ஆதிக்கவர்க்கம் குறித்தும், பணம் இல்லாதவர்கள் குறித்தும் பேசுகிறது. சங்க காலத்தில் வாழ்ந்த பாணர், கூத்தர், பொருநர், விறலியர் போன்ற கலைஞர்களின் வாழ்வும் நலிவடைந்த நிலையில் இருந்தது என்பது மறுப்பதற்கு இல்லை. இவை எல்லாம் மானுடவியல் சிந்தனையை நோக்கி ஆற்றுப்படை நூல்களில் பதிவாகி உள்ளன என்பதை நாம் பார்க்கலாம். குறிப்பாக நலிவடைந்த வாழ்க்கை வாழ்ந்த கலைஞர்களிடம் கலைகளும், கருவிகளும் இருந்தன என்பதை மறுப்பதற்கு இல்லை. அது நம் முன்னோர்களின் கருவூலமாக இருந்தன. இந்த கலைஞர்களை குறித்தும் அவர்களின் கலைகள் குறித்தும் அவர்களின் கருவிகள் குறித்தும் இக்கட்டுரை பேசுகிறது.

## ஆற்றுப்படை நூல்களில் கலைஞர்களின் வாழ்வு

கூத்தர், பொருநர், பாணர், விறலியர் ஆகியோர்கள் கலைஞர்களாக அறியப்படுகிறார்கள். பாணர்கள் இசைக்கருவியை கொண்டு பாடும் கலைஞர்களாகவும், கூத்தரும், பொருநரும், விறலியரும்,

ஆடற்கலைஞர்களாகவும் அறியப்படுகிறார்கள். இவர்கள் கலைத்தொழில் இல்லாத காலங்களில் உழைப்பாளிகளாக இருந்துள்ளார்கள். ஆடல், பாடலில் கிடைக்கின்ற பொருளை வைத்துத்தான் இவர்களின் வாழ்வு நகர்ந்து இருக்கிறது எனில் மிகையாகாது.

## பாணர்களின் வாழ்வு

பண்டைய தமிழகத்தில் "துடியன், பாணன், பறையன், கடம்பன் என்று இன்றான்கல்லாது குடியும் இல்லை" என்பதில் இப்பாணர்கள் நான்கு குடிகளுள் ஒரு குடியினர் என்ற சிறப்பு உடையவர் என்பது புலனாகின்றது. இப்பாணர்கள் இசைக்கலையில் வல்லுநர்கள் பல நரம்புகளை உடைய பெரிய யாழை இசைத்து பாடுபவர் பெரும்பாணர் எனப்பட்டார். சிறிய யாழை இசைத்து பாடுபவர் சிறிய பணர் எனப்பட்டார். இப்பாணர்கள் வள்ளல்களை நாடிச் சென்று பரிசில் பெற்றனர். பாணர்கள் இசைக் கலையை அனுபவமாகவும், கல்வியாகவும் கற்று உயர்ந்த நாகரிக வாழ்வு வாழ்ந்து இருந்தனர் என்னும் பெருமைகள் அறிய கிடக்கிறது.

## பாணர்களின் வகைகள்

பாணர்களில் பல பிரிவுகள் இருந்ததை நாம் பார்க்க முடிகிறது. பாணரும், இசைப்பாணரும், மண்டைப்பாணரும் இருந்தனர் என்பதை தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. இவர்களில் இசைப்பாணர், பாடல் பாணர், அம்பணவர், அகவர் என்று அழைக்கப்பட்டுள்ளனர். யாழ்பாணர் யாழ் இசைத்து பாடுகின்றவர்கள் அவர்கள் வாசித்த யாழை பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ் ஆகியவை சிறப்பாக குறிப்பிடப்படுகின்றன. யாழ் பாணர்கள் யாழ் மட்டுமின்றி குழலையும் இசைக்கருவியாக கொண்டு தன் கலைத்திறனை வெளிப்படுத்தி உள்ளனர் என்பதை அறிய முடிகிறது. பாணர்களில் சென்னியர் இன்னிசைக்காரர், மதங்கர் என பல பெயர்களில் ஆண்கள் அழைக்கப்பட்டார்கள். சென்னியர் மண்டை என்னும் உண்கலத்தில் உண்ட காரணத்தால் மண்டைப்பாணர் எனப்பட்ட இவர்கள் சென்னியர் என்று அழைக்கப்பட்டார்கள்.

## கலைஞர்களின் இசைக்கருவிகள்

இசைக் கலைஞர்கள் பல்வேறு இசைக்கருவிகளை பயன்படுத்தி உள்ளனர். இக்கருவிகளை பையில் இட்டு தம்முடன் எடுத்து சென்றுள்ளனர். கூத்தர்களின் தலைவன் ஒருவன் பல்வேறு இசைக்கருவிகளை பையில் இட்டு கட்டி சென்றுள்ளதை மலைபடுகடாமில் பார்க்க முடிகிறது. முழவு, ஆகுளி (சிறுபறை), பாண்டில் (கஞ்சத்தாளம்), கோடு (கொம்பு), நெடுந்தூம்பு (நெடுங்கியம்), குறுந்தாம்பு, குழல் தட்டை (கரடினகி), எல்லரி (சல்லி), பதலை ஒரு கண்மாக்கினை எனவும் பிற வாத்திய கருவிகளையும் கூத்தர்கள் பையில் இட்டுக்கட்டி எடுத்துச் சென்றுள்ளனர். அந்தக்கட்டுகள் பலாக்காய்க் கொத்துகளை போல காட்சி அளித்ததை மலைபடுகடாம் குறிப்பிடுகிறது.

இதனையே

"திருமழை தலைஇய இருள்நிற விசும்பின்
விண்ணதில் இமிழ்இசை கடுப்பப் பண் அமைத்துத்
திண்வார் விசித்த முழவொடு ஆகுளி
நுண்ணுருக்கு உற்ற விளங்கு அடர்ப் பாண்டில்"

என்ற பாடலில் இசைக்கருவிகளை பாணர்கள் காட்டு வாழியாக, மன உறுதியோடு கொண்டு செல்லும் தன்மை குறிப்பிடப்படுகிறது (Subramanian, 2018).

## வறுமையும், புலமையும்

ஆற்றுப்படை நூல்களில் அறிவுச் சார்ந்த கலைஞர்களாக ஆடலும், பாடலும் கலந்த வல்லுநர்களாக பாணர்கள் அறியப்பட்டாலும், அவர்களின் வாழ்க்கை வறுமையில் உழன்றபடி தான் இருந்தது என்பது மறுக்க முடியாது. புலவர்கள் வள்ளல்களாகிய மன்னர்களிடம் சென்று தனது மனைவி, மக்கள், சுற்றத்தாரின் துன்பத்தை நீக்கி தரும்படி பாடியிருக்கிறார்கள் என்ற குறிப்பினையும் நாம் பார்க்க முடிகிறது. அதுபோல கணவனும், மனைவியும் ஒற்றுமையாக இருந்து விழாக்களிலும் தங்களது கலைத்திறனைக் காட்டி பாடி பரிசு பெற்று இருக்கிறார்கள் என்றச் செய்தியையும் நாம் பார்க்க முடிகிறது. கரிகாலன் தன்னைப் பாடி வந்த பொருநனுக்கு நுண்ணிய வேலைப்பாடு மிகுந்த பாம்பின் தோலை ஒத்த ஆடையினை வழங்கியது பொருநராற்றுப் படையில்

"நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந்து

அரவு உரி அன்ன, அறுவை நல்கி

மழைஎன மருளும் மிகழ்செய் மாடத்து"

என்ற அடிகள் மூலம் அறியலாம் (Subramanian, 2018). பொதுவாகவே மன்னர்கள் பொருநர், கூத்தர், பாணர் என்ற கலைஞர்களை இன்முகத்தோடு வரவேற்று அவர்களை உபசரித்த செய்திகளை காண முடிகிறது. தொண்டை நாட்டு தலைவனாக இளந்திரையன் அரண்மனையில் பல்சுவை உணவோடு கூடிய உணவுகளையும் கொடுத்து சிறியவர்களுக்கு சிறிய வெள்ளி கலங்களையும், பெரியோர்களுக்கு பெரிய வெள்ளி கலங்களையும் வழங்கி சிறப்பித்த செய்திகளை நாம் பார்க்க முடிகிறது.

## வறுமை நிலை

பண்டை காலத்தில் கலைஞர்கள் வறுமையில் சிக்கி தவித்தார்கள். சிறுபாணாற்றுப் படையில் உள்ள பாடல் மூலம் நாம் புரிந்து கொள்ளலாம். கிணை மகள் பசியால் வருந்தும் சூழலில் சமைக்க உணவுப்பொருட்கள் வீட்டில் இல்லை. அவள் வீட்டிற்கு வெளியே உள்ள குப்பைக் கீரையை நகங்களால் கிள்ளுகிறாள். வீட்டிற்கு வெளியே உப்பில்லாமல் வேக வைக்கிறாள் அதை யாராவது பார்த்தால் இழிவாக கருதுவர் என்று எண்ணி வீட்டு கதவை தாழிட்டு தனது வீட்டாராரோடு (பெரிய சுற்றம்) உணவு உண்டாள் என்ற குறிப்பு வருகிறது. ஒரு கலைஞனது வாழ்க்கையை அவனது குடும்ப வறுமையை இதை விட தத்துருவமாக சித்தரிக்க முடியாது.

இதனையே

"வளைக்கைக் கிணைமகள் வள்ளுகிர்க் குறைத்த

குப்பை வேளை உப்பிலி வெந்ததை

மடவோர் காட்சி நாணிக் கடையடைத்து

இரும்பேர் ஒக்கலோடு ஒருங்குடன் மிசையும்"

என்ற அடிகளின் மூலம் பசியால் வருத்தம் அடைந்தாலும் மான உணர்வுடன் உணவு உண்டனர் என்பது புலனாகிறது (Subramanian, 2018).

## ஆற்றுப்படையில் விளிம்பு நிலை வாசிப்பு

பசித்தவனுக்கு உணவை வழங்குவதை விட உருவாக்கிக் கொள்ளும் வழியை அவனுக்குச் சொல்லி கொடுப்பதே சிறந்த அறம். அதனை சமகால இலக்கியத்தோடு நாம் இணைத்து பார்த்தோமானால் இன்றைய நடைமுறை வாழ்க்கையினுடைய சிக்கல்கள் நமக்கு தெரியவரும். தேடிய செல்வத்தை யாருக்குமே கொடுக்காமல் செல்வம் வீணானாலும் கவலை இல்லை என்கின்ற ஒரு வாழ்வியல் சிந்தனை சமகாலத்தில் இருக்கின்றது. ஆனால் தனக்கு பரிசு அளித்தவனின் முழு முகவரியை கூறி அந்த முகவரிக்கு செல்லும் தடத்தினை சிறிதும் வழுஉ இல்லாமல் எடுத்து உரைத்து

இன்ன பரிசில் யான் பெற்றேன் என்று பெற்ற பெருவளத்தை மறைக்காமல் காட்டி மற்றொருவரையும் வாழச் செய்வதே ஆற்றுப்படை இலக்கியத்தின் சாராம்சமாகும்.

## பாணர்களின் வறுமை குறித்த பதிவுகள்

பாணர்கள் கையில் யாழ் வயிற்றில் பசி, இடையில் அளவுக்கு அமைந்த உடை அதுவும் தன்னிலையோடு வேற்றிழை நுழைந்து வியர்வையினால் நனைந்த கந்தல் ஆடை அணிந்து இருந்தனர் என்ற குறிப்பினை பார்க்க முடிந்தது.

"வேறு இழை நுழைந்த வேறு நனை சிதை ஆர்

ஒங்கி உடுத்த உயர்வர் பாணர்"

என்ற புறநானுற்றுப் பாடல் வரிகள் மூலம் இதனை அறியலாம் (Durai Swamy Pillai, 2017a). பாணன் வறுமையில் வாடி தனது அன்றாட அடிப்படை தேவைகளை கூட நிறைவேற்ற முடியாத அளவிற்கு இருந்தான் என்பதையும் வறுமையின் காரணமாக பாணனின் உடல் கோரப்பிடியினால் உடல் பொலிவிழந்து காணப்பட்டது எனவும் உடும்பு என்னும் விலங்கினை இறைச்சிக்காக மேல்தோலினை உரித்த பின்பும் தசையும், எலும்பு துரித்து கொண்டு காட்சியளிப்பது போன்று பாணன் விலா எழும்புகள் தெரியும் வண்ணம் தோற்றம் அளித்தான். சிறுபாணனின் கடல் கடும் பசியால் மிகவும் வாடியது என்பதை "அழிபசி வருத்தம் வீடப் பொழிகவுள்" என்ற வரி விளங்குகிறது. அதுமட்டுமின்றி "புல்லென் யாக்கைப் புலவு வாயப்பாண" என்ற பெரும்பாணாற்று வரிகளில் பழுத்த மரத்தைத் தேடி அலையும் பறவைகள் போல் சுற்றத்தோடு காலால் திரியும் பொலிவுற்ற உடலுடன் கற்ற கல்வியை வெறுத்துக் கூறும் பாணனே என்று வெளிப்படுத்துகிறது. பாணனின் வருந்திய உடலை "இளம்படு புலவன்" என்று மலைப்படுகடாம் குறிப்பிடுகிறது. பாணனும் அவனது சுற்றமும் வறுமை வயப்பட்டு இருந்தனர் என்பதை

"வறுமையக் பாணர் பூஇல் பெருந்தகைபோல"

என்ற குறுந்தொகை பாடல் உரைக்கின்றது (Durai Swamy Pillai, 2017b).

புறநானூறு பாடல் ஒன்றிலும்

"பாணன் காண்க இவன் கடும்பினது இடும்பை"

என தெரியப்படுத்துகிறது. பாணனின் அடுக்களை சுவர் செதில் அரித்து காளான் பூத்து காணப்படும் எனவும் அண்மையில் ஈன்ற நாய் பசியின் கொடுமையால் குரைக்கும் என்ற பதிவை

"புனிற்று நாள் குரைக்கும் புல்லென் அட்டில்

காழ்சோர் முதுசுவர்க் கணச்சிதல் அரித்த

பூமி பூத்த புழலகா ளாம்பி"

என்ற பாடல் அடிகள் விளக்குகின்றன.

"பழம் பசி கூர்ந்நத இரும்யெரெங்கல்"

என்ற வரியில் பழம் பசி என்பது பாணனின் தொன்று தொட்டே வந்த வறுமை நிலையை புலப்படுத்தும்.

## பாணனின் தூது வாழ்க்கை

பாணன் தலைவன் தலைவி இடையே உள்ள பிரச்சனைகளை சரி செய்ய உதவி இருக்கிறான். இப்படிப்பட்ட சூழலில் பாணனுடைய வாழ்வியல் சித்திரம் நமக்கு பிரமிப்பாக இருக்கிறது.

தலைவனுக்கு துணையாக இருக்கும் பாணர்கள் தலைவன் பொருட்டு தலைவியிடத்து தூதுவனாக சென்று உள்ளனர்.

"பாணன் வந்ததென் தூதே"

என்ற வரிகள் தலைவியின் நிலையை தக்க விதத்தில் எடுத்து உரைக்கும் விதமாக பாணன் இருந்துள்ளான் என்பது புலனாகிறது (Jeyabal, 2011). அதுமட்டுமின்றி பரத்தைகளின் பல்வேறு செயல்பாட்டிற்கு பாணர்கள் தூதாக பயன்பட்டிருக்கின்றார்கள் என்பதும் அறிய முடிகின்றது.

## பாணர்களின் நாடோடி வாழ்க்கை

பாணர்கள் எப்போதும் அலைந்து திரிந்தே தனது வாழ்நாட்களை கழித்து உள்ளனர். தன்னை ஆதரிக்கும் புலவர்களை நாடி செல்லும் நாடோடி வாழ்க்கையை மேற்கொண்டு வாழ்ந்தான்.

"பாணர் செல்லும் போது சுற்றத்துடன் செல்வர். ஏவலிளையர் யாழினை சுமப்பர். முழவு ஒரு கண்மாக்கினை நெடுவங்கியம், பிற இசைக்கருவிகள் யாவையும் ஒரு சேர சேர்த்து கட்டி காவடியை போல ஒரு பக்கத்தில் தொங்க விடுவர். மறுபக்கத்தில் பாடல் துறைக்கு வேண்டிய கருவியெல்லாம் கூடின மூட்டையை தொங்கவிடுவர். அக்காவடியை பாணர் சுற்றத்தினர் சுமந்து வருவர். இசைத்துறையில் வல்ல இளையோர் தாம் செல்லும் வழியில் தீங்கு வராமை குறித்து கடவுளை பரப்பி வழிபடுவர்" (இராசாமாணிக்கனார், பத்துபாட்டு ஆராய்ச்சி பக்கம்.55)

பாணர்கள் காடுகளின் வழி செல்லுமிடத்து கள்வராலும், விலங்குகளாலும் பிற தெய்வங்களாலும் தீங்கு வராது காப்பதற்கு கடவுளைப் பாடுவது இயல்பு. பாணர்கள் யாழ் தெய்வத்தை வணங்கிய பின் ஆடல், பாடலை முறைப்படி நடத்துவான் என்பதை

"இடனுடைப் பேர்யாழ் முறையுளிக் கழிப்பிக்

கடன் அறி மரபின் கைதொழூஉப் பழிச்சி" (பெரும்பாணாற்றுப்படை பா.எண். 464-465)

வெயில் காலத்தில் பாறை சூடும். கூரிய கற்களும் துன்பத்தைத் தரும். அதனால் வெயில் தணிந்த பின்பு அந்திப் பொழுது பாணர்கள் நடந்து சென்றனர் என்று மலைபடுகடாம் விளக்குகிறது.

"வெயில் புறந் தரூஉம் இன்னல் இயக்கத்து

கதிர் சினம் தணிந்த சமயத்துக் கழிமின்" (மலைபடுகடாம் பா.எண். 374 - 375)

என்ற அடிகள் வழி பாணர்கள் நாடோடி வாழ்க்கை முறையை வாழ்ந்து வந்தனர் என்பது புலனாகும்.

## முடிவுரை

ஆற்றுப்படையில் கலைஞர்களின் வாழ்க்கை விளிம்பு நிலை சார்ந்த நாடோடி வாழ்க்கையாகவும், வறுமையோடு இரண்டற கலந்த வாழ்க்கையாகவும், உணவு, வாழ்வாதாரம், உறைவிடம் சிக்கலான வாழ்க்கை நிலையை அவர்கள் கடந்து வந்துள்ளனர் என்பதை ஆற்றுப்படை இலக்கிய பிரதிகள் வழி நமக்கு அறிய முடிகிறது.

## References

Durai Swamy Pillai, S (2017), Kurunthogai, Poompugar Pathi Pagam, Chennai, India.

Durai Swamy Pillai, S (2017a), Purananooru, Poompugar Pathipagam, Chennai, India.

Jeyabal, R. (2011) Agananooru Moolamum Uraiyum, New Century Book House, Chennai, India

Subramanian, S. (2018) Sangam Literature, Manivasagar Pathipagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License